# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 128 /பேரூ/2025**
**நாள் : 10.04.2026**

V. சரவணக்குமார்,
சின்னவடவள்ளி,
கோயம்புத்தூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம். - எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், பொகளூர் வழி, சின்னவடவள்ளி அஞ்சல், 6/46, பெரிய வடவள்ளி என்ற முகவரியில் வசிக்கும் திரு. V. சரவணக்குமார் என்பவரது 24.03.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.04.2025 அன்று பெறப்பட்டு, 128/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கோயம்புத்தூர் மாவட்டம், பொகளூர் வழி, சின்னவடவள்ளி அஞ்சல், 6/46, பெரிய வடவள்ளி என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. V. சரவணக்குமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 24.03.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

நான் மனு எண். / நாள் 269/28.10.2024 அன்று P.N. பாளையம் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் மேட்டுப்பாளையம் மெயின்ரோடு பகுதியில் R. ஜெயராமன் என்பவர் கட்டிட அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் கட்டிடம் கட்டி வருகிறார் என்று மாவட்ட ஆட்சித்தலைவரிடம் புகார் மனு அளித்தேன். அவர் பேரூராட்சியின் உதவி இயக்குநருக்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். ஆனால் இதுநாள் வரை எனது மனு மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காததால் கட்டிட உரிமையாளர் விதிகளை மீறி தன் இஷ்டம்போல் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர் கட்டிட உரிமையாளரிடம் சுய லாபம் அடைந்துவிட்டாரா என்று ஐயம் எழுகிறது. ஆகவே தாங்கள் உரிய விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தனது 24.03.2025 நாளிட்ட புகார் மனுவில் தெரிவித்துள்ளபடி, 28.10.2024 நாளிட்ட மனுவை கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு சமர்ப்பித்துள்ளார். அதில் –

பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு மேட்டுப்பாளையம் மெயின்ரோடு பழைய க.எண். 3/49, R. ஜெயராமன் என்பவர் கமர்சியல் கட்டிடம் கட்ட அனுமதி பெற்றுள்ளார். இவர் கட்டிட வரைபடத்திற்கு மாறாக தன் இஷ்டம் போல் கட்டிடம் கட்டி வருகிறார். ஆகவே தாங்கள் வரைபடத்தில் உள்ளவாறு கட்டிடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 08.05.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 19.05.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 602/2024ல் மனுதாரர் தற்போது சமர்ப்பித்துள்ள 24.03.2025 நாளிட்ட புகார் குறித்து ஏற்கனவே இதே புகாரினை மனுதாரரான திரு. V. சரவணக்குமார் என்பவரால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்திற்கு சமர்ப்பித்த 04.11.2024 நாளிட்ட புகார் மனுவில் தெரிவித்து அதன் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தால் ஆணை எண். 209/பேரூ./2024 நாள் 30.01.2025ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது எனவும் மேற்படி மனுதாரரான திரு. V. சரவணக்குமார் என்பவர் பல கோணங்களில் இப்பொருள் தொடர்பாக தகவல்களை கேட்டுக்கொண்டே இருக்கிறார். அதற்கு பேரூராட்சி அலுவலகம் வாயிலாக தகவல்கள் அனைத்தும் அளிக்கப்பட்டே வருகிறது என தெரிவித்துள்ளார்.

4. பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்த 19.05.2025 நாளிட்ட அறிக்கையை இம்முறைமன்ற நடுவம் ஆய்வு செய்தது மற்றும் ஆணை எண். 209/பேரூ./2024 நாள் 30.01.2025ல் வெளியிடப்பட்ட ஆணையினை பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் திரு. V. சரவணக்குமார் தற்போது 24.03.2025 நாளிட்ட மனுவில் குறிப்பிடப்படும் பழைய கதவு எண். 3/49, மேட்டுப்பாளையம் மெயின் ரோட்டில் அனுமதிக்கு மாறாக கட்டடம் கட்டப்பட்டதாக புகார் தெரிவித்துள்ளார். ஆனால் மேற்காணும் ஆணை எண். 209/பேரூ./2024 நாள் 30.01.2025ல் மனுதாரரின் புகாரான பழைய கதவு எண். 3/49, மேட்டுப்பாளையம் மெயின் ரோடு என்கிற முகவரி இடம் பெறவில்லை என்பதால், தற்போதைய மனுதாரரின் 24.03.2025 நாளிட்ட மனுவானது மேற்காணும் ஆணையை சார்ந்ததா என்பதை உறுதி செய்து உடன் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பெரியநாயக்கன்பாளையம் செயல் அலுவலரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 20.01.2026 நாளிட்ட கடிதத்தின் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

5. இதற்கிடையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு இம்முறைமன்றத்தில் 10.03.2026 அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு 25.02.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரரான திரு. V. சரவணக்குமார் என்பவர் சொந்த அலுவல் காரணமாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.03.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரில் வரமுடியாத சூழ்நிலையில் உள்ளதாகத் தெரிவித்து 09.03.2026ல் மின்னஞ்சல் அனுப்பியுள்ளார். மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

7. எதிர்மனுதாரரான பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் 10.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- மனுதாரர் திரு. V. சரவணக்குமார் என்பவர் 24.03.2025 நாளிட்ட புகார் மனுவில் கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பழைய கதவு எண். 3/49, மேட்டுப்பாளையம் மெயின்ரோடு என்ற முகவரியில் திரு. ஆர். ஜெயராமன் என்பவர் வரைபட அனுமதிக்கு மாறாக கூடுதலாக வணிக கட்டடம் கட்டியுள்ளதாக புகார் தெரிவித்துள்ளார்.
- ஆனால் மனுதாரரின் இதே புகார் குறித்து மனுதாரரால் ஏற்கனவே இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த 04.11.2024 நாளிட்ட புகார் மனு மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு இம்முறைமன்ற நடுவத்தால் ஆணை எண். 209/பேரூ./2024 நாள் 30.01.2025ல் ஆணை வெளியிடப்பட்டது.
- இருப்பினும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தால் வெளியிடப்பட்ட ஆணை எண். 209/பேரூ./2024 நாள் 30.01.2025ல் வெளியிடப்பட்ட வார்டு எண். 18ல் திரு. ஜெயராமன் என்பவர் வரைபட அனுமதிக்கு மாறாக புகாராக தெரிவித்த கட்டடமும், தற்போது மனுதாரர் திரு. V. சரவணக்குமார் என்பவர் தனது 24.03.2025 நாளிட்ட புகார் மனுவில் தெரிவிக்கும் கட்டடமும் ஒன்றானது என்பதை உறுதி செய்யும்பொருட்டு, மேற்படி கட்டடத்தினை நேரடியாக உரிய ஆவணங்களுடன் கள ஆய்வு செய்து 15 நாட்களுக்குள் இது குறித்து அறிக்கையினை சமர்ப்பிக்கிறேன் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

8. இதனைத் தொடர்ந்து, இம்முறைமன்ற நடுவத்தின் 20.01.2026 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்ட விளக்கம் குறித்தும் மற்றும் செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தப்படியும் 23.03.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண். 63/2026/இல் தனது அறிக்கையை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலை மெயின் ரோடு பகுதியில் திரு. ஆர். ஜெயராமன் என்பவர் பழைய கதவு எண். 3/49, மேட்டுப்பாளையம் மெயின் ரோட்டில் அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் கட்டிடம் கட்டி உள்ளார் என்று புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தினை செயல் அலுவலர் அவர்களால் 23.03.2026ஆம் தேதியன்று நேரில் ஆய்வு செய்யப்பட்டது. மனுதாரர் தெரிவித்துள்ள பழைய கதவு எண். 3/49, மேட்டுப்பாளையம் மெயின் ரோடு என்ற முகவரியில் பழைய கட்டிடத்தை இடித்து பின்வருமாறு புதியதாக கட்டிட அனுமதி பெற்றும், மேலும் கட்டிட அனுமதி பெறாமலும் கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு பின்வருமாறு சொத்துவரி வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

| வ.எண். | உரிமையாளர் பெயர் | கட்டிட அனுமதி விபரம் | கட்டிட அனுமதி அளவு விபரம் | சொத்துவரி விதிப்பு எண். | வரி விதிப்பு தொகை வருடத்திற்கு ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| கட்டிட அனுமதி பெற்று கட்டப்பட்ட கட்டிடம் விபரம் | | | | | | |
| 1 | ஆர். ஸ்ரீகற்பகம் | கட்டிட உரிமம் எண். 101/2023-24 (வணிக கட்டிடம்) | 1995 சதுரடி | 12958 | 24566 | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | ஆர். ஜெயராம் | 102/2023-24 (வணிக கட்டிடம்) | 1996 சதுரடி | 12960 | 24580 | - |
| கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு செய்யப்பட்ட விபரம் | | | | | | |
| 3 | ஆர். ஸ்ரீகற்பகம் | - (வணிக கட்டிடம்) | 1705 சதுரடி | 12959 | 20996 | அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 30.03.2022 மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை-1 ந.க.எண். 1469/2023/இ5 நாள் 06.02.2023ன்படி பேரூராட்சி பகுதியில் அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டிடங்களுக்கு முன்தேதியிட்டு 13 அரையாண்டுகளுக்கு வரி நிர்ணயம் செய்து வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. |
| 4 | ஆர். ஜெயராம் | - (வணிக கட்டிடம்) | 2184 சதுரடி | 12961 | 26894 | |
| 5 | ஆர். ஜெயராம் | - (வணிக கட்டிடம்) | 4380 சதுரடி | 12962 | 53932 | |

9. மனுதாரரின் புகார் மனு மற்றும் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. V. சரவணக்குமார் என்பவர் தனது 24.03.2025 நாளிட்ட புகார் மனுவில், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பழைய கதவு எண். 3/49, மேட்டுப்பாளையம் மெயின் ரோடு என்ற முகவரியில் திரு. R. ஜெயராமன் என்பவர் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் வணிகக் கட்டடம் கட்ட அனுமதி பெற்று, ஆனால் வரைபட அனுமதிக்கு மாறாக கட்டடம் கட்டி வருவதாக புகார் தெரிவித்துள்ளார்.

மேற்காணும் புகார் மனு தொடர்பாக பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரால் 23.03.2026 அன்று நேரடி கள ஆய்வு செய்யப்பட்டதில், மனுதாரர் தெரிவித்துள்ள பழைய கதவு எண். 3/49, மேட்டுப்பாளையம் மெயின் ரோடு என்ற முகவரியில் பழைய கட்டடத்தை இடித்து ஆர். ஸ்ரீகற்பகம் என்பவரால் 1995 சதுர அடியில் வணிக கட்டடம் கட்ட அனுமதி (கட்டட உரிமம் எண். 101/2023-24 பெற்றும் மற்றும் ஆர். ஜெயராமன் என்பவரால் 1996 சதுர அடியில் வணிக கட்டடம் கட்ட கட்டட அனுமதியும் கட்டட உரிமம் எண்.102/2023-24) பெற்று கட்டடங்கள் கட்டப்பட்டு உரிய சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

மேலும் ஆர். ஸ்ரீகற்பகம் என்பவரால் 1705 சதுர அடியில் வணிக கட்டடம் மற்றும் ஆர். ஜெயராம் என்பவரால் 2184 சதுர அடி மற்றும் 4380 சதுர அடியில் பேரூராட்சியின் கட்டட அனுமதி பெறாமல் கட்டடங்கள் கட்டப்பட்டு உள்ளதையும், அக்கட்டடங்களுக்கான முன்தேதியிட்டு 13 அரையாண்டுகளுக்கு வரி நிர்ணயம் செய்து வரி வசூலிக்கப்பட்டு வருகிறது என்பதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை வாயிலாக தெரிய வருகிறது.

மேற்காணும் நிலையில், பேரூராட்சியின் கட்டட அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998ன்படியும் மற்றும் அனுமதியற்ற கட்டடங்கள் குறித்து மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்கள் வழங்கியுள்ள ஆணைகளில் உள்ள வழிகாட்டுலின்படியும் உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

// ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. V. சரவணக்குமார்,
6/46, பெரிய வடவள்ளி,
பொகளூர் வழி, சின்னவடவள்ளி அஞ்சல்,
கோயம்புத்துார் மாவட்டம் - 641 697.
2. செயல் அலுவலர்,
பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி,
கோயம்புத்துார் மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

15/4/26
செயலாளர்
15/4/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032